## கிடாம்பி இராமாநுசப்புள்ளான்

## வாழி திருநாமம்

தீதகல் கிடாம்பி ஆச்சான் அடியோன் வாழியே
சித்திரைச் சீர் ஆதிரையில் செகத்துதித்தோன் வாழியே
போதமர்ந்தப் பொற்கச்சிப் புரத்து வந்தான் வாழியே
புறச் சமயப் பொய்ப் போதம் புடைத்தடித்தான் வாழியே
ஆதரத்தில் பாடியத்தை அமர்ந்துரைப்போன் வாழியே
ஆழ்வார்கள் அருமறையும் ஆங்களிப்போன் வாழியே
ஏதமில் சம்பிரதாய எழிலெரிப்போன் வாழியே
இராமாநுசப்புள்ளான் இணை அடிகள் வாழியே

---